நான் சோலார் பவர் கம்பெனி நடத்துவதாக நிரூபிக்கத் தயாரா? நிரூபிக்கத் தவறினால்

நிர்மல்குமார் அமைச்சர் பதவியை விட்டு விலகுவாரா?

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு சவால்!

நெல்லை, அக்.26- "நான் சோலார் பவர் கம்பெனி நடத்துவதாக நிரூபித்தால் அரசியலை விட்டே விலகத் தயார். அனால் நிரூபிக்கத் தவறினால் அமைச்சர் பதவியை விட்டு அமைச்சர் நிர்மல் குமார் விலகுவாரா? கேட்டுச் சொல்லுங்கள் 'CM SIR' என்று முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு சவால் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

மின்சாரம் கொள்முதலில் ரூபாய் 1500 கோடிக்கு மேல் பெருமளவில் ஊழல் முறைகேடுகள் நடைபெறுவதாக நான் கூறியதற்கு மின்துறை அமைச்சர் பதிலாக,நான் சோலார் பவர் கம்பெனி நடத்துவதாகவும் அதன் அனுமதிக்கு பல பேர் மூலம் அவரிடம் முயற்சி செய்ததாகவும் சொல்கிறார்.அதனை அவர் நிரூபித்தால் அடுத்த நிமிடமே நான் அரசியலை விட்டு



விலகத் தயார்! நிரூபிக்க தவறினால் அமைச்சர் பதவியை விட்டு விலக தயாரா? கேட்டு சொல்லுங்கள் CM sir?

வழக்கமாக குளிர் காலத்தில் (Water Season) TNEB மின் கொள்முதல் செய்வதில்லை. TNEB க்கு நீண்டகால ஒப்பந்தங்கள் மூலம் யூனிட் 1க்கு ரூபாய் 4.91 மற்றும் ரூபாய் 5.50 விலையில் கிடைக்க வேண்டிய 2800 MW மின்சாரத்தில் வெறும் 2100 MW மட்டுமே வாங்கப்படுகிறது.அதானியிடம் இருந்து வர வேண்டிய 1116 MWல் 550 MW வாங்க வேண்டிய குறைந்த விலை மின்சாரம் வாங்குவதை தவிர்த்து விட்டு,யூனிட் 1 க்கு ரூபாய் 35 க்கு தனியாரிடம் மின்சாரம் வாங்க துடிப்பின் நோக்கம் என்ன? இது உங்களுக்கு தெரியுமா CMsir?

அவசர மின் தேவை ஏற் பட்டால் "DAM" (Daily Ahead Market) சந்தை மூலம் அதிக பட்சமாக யூனிட் 1 க்கு ரூபாய் 12க்குள் மின்சாரம் வாங்க முடியும். ஆனால் திட்டமிட்டு செயற்கை யான மின் தட்டுப்பாட்டை உருவாக்கி,தனியாருக்கு ஆதரவாக யூனிட் 1க்கு ரூபாய் 35 வரை கொடுத்து மின் கொள்முதல் செய்வ தற்கு டெண்டர் விடப்படு வது உங்கள் அனுமதியோடு தான் நடைபெறுகிறதா CM sir?

மர்மம் என்ன?

உடன்குடி மற்றும் வட சென்னை அனல் மின் நிலை யங்களில் சுமார் 3900 MW வரை உற்பத்தி செய்யும் கட்டமைப்பு இருந்து ம், வே ண் டு மெ ன் றே வெறும் 1,500 MW முதல் 1800 MW மட்டுமே உற்பத்தி செய்துவிட்டு மகாராஷ் டிரா ரத்னகிரியில் இருந்து மின் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்வதின் மர்மம் என்ன CMsir?

மின்வாரியத்தை அதானிக்கு விற்க திட்டம்!

தமிழ்நாடு மின்வாரிய சொத்துக்களின் மதிப்பு ரூபாய் 25 லட்சம் கோடி என்றும் சந்தை மதிப்பு ரூபாய் 50 லட்சம் கோடி யாக இருக்கும் TNEB சொத்தை அதானிக்கு விற்ப தற்காக குளிர்காலத்திலும் அதிகமான மின் கொள் முதல் செய்து கடன் அளவை பல லட்சம் கோடி ரூபாய் செயற்கையாக உரு வாக்கி Book valueவில் மின் வாரி யத்தின் மொத்த சொத்துக்களும் ஒரிரு லட் சம் கோடி ரூபாய்தான் என்று குறைத்து கணக் கிட்டு தமிழர்களின் உழைப் பால் வந்த மின்வாரிய சொத்தை அதானிக்கு அடி மாட்டு விலைக்கு விற்க துடிக்கும் மின்துறை அமைச் சரை வன்மையாக கண்டிப் பதோடு! மின்வாரியத்தை அதானிக்கு விற்க மாட்டேன் என்று உத்தர வாதம் தர முடியுமா CMsir?

இவ்வாறு அவர் தமது சமூக வலைத்தளத்தில் பதி விட்டுள்ளார்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(24.10.2026)

1. சென்னையை அடுத்த பெருங்குடியில் சீட்டு விளையாட்டில் ஏற்பட்ட தகராறில் நேபாள வாலிபர் கத்தியால் குத்தி கொலை, ஹோட்டல் ஊழியர் தப்பி ஓட்டம் ...



2. ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே குளத்து மேடு பகுதியில் மது குடித்ததை கண்டித்த தாயை அடித்தே கொன்ற மகன் சிக்கினான்....

3. சென்னை கொரட்டூர் அருகே படவேட்டம்மன் கோவில் தெருவில் மனைவியின் கழுத்தை அறுத்து கொலை செய்து கணவன் தற்கொலை ...

4. மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே திருமுல்லைவாசல் கிராமத்தில் மனைவி மகளை அடித்து கொலை செய்து, மீனவர் தற்கொலை ....

5. நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகே பெட்ரோல் போடும் போது செல்போன் பேசியதை தட்டிக் கேட்டதால் , பெட்ரோல் பங்க் ஊழியருக்கு அரிவாள் வெட்டு , பெட்ரோல் பங்க் சூறை ...



6. திருநெல்வேலி மாவட்டம், திருவரங்கநேரி கிராமத்திற்குள் புகுந்து ரகளை செய்த மர்ம கும்பல் அரிவாளால் வெட்டியதில் 3 பேர் படுகாயம்....

7. கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் அருகே கணவன் மீது புகார் கொடுக்கச் சென்ற பெண்ணை , ஆசை வார்த்தை கூறி ஏமாற்றி கற்பம் ஆக்கிய ஏட்டு சிக்கினார் ...

8. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே மாயமான சிறுமி 15 நாட்களாக கிடைக்காததால் பரபரப்பு, பணத்துக்காக விற்பனையா, சிபிசிஐடி போலீஸ் விசாரணை ...

9. கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகே உப்பாரப்பட்டியில் டியூசனுக்கு சென்று வீடு திரும்பிய ஏழாம் வகுப்பு மாணவன் மாயம், கடத்தலா..?



10. சென்னை தீவுத்திடல் அருகே அண்ணா சாலையில்அதிகாலையில் இருசக்கர வாகனத்தில் வந்த வாலிபரை வழிமறித்து தாக்கி மூன்று சவரன் செயின் மற்றும் பணத்தைப் பறித்த கும்பல் தப்பி ஓட்டம் ...

11. சென்னை ஓட்டேரியில் வேலையை முடித்து வீடு திரும்பிய கட்டிட தொழிலாளியை வழிமறித்து சரமாரியாக தாக்கி பணத்தைப் பறித்த கும்பல் ...



12. தஞ்சாவூரில் தனியார் மருத்துவமனையில்பங்குதாரர்களுக்கும்ஏற்பட்டபிரச்சனையை தீர்க்க காவல் நிலையத்தில் புகார் அளித்தால், 5 கோடி ரூபாய் கட்டப்பஞ்சாயத்து செய்த இன்ஸ் பெக்டர், சமூக வலைதளங்களில் வீடியோ வெளியாகி பரபரப்பு ...

13. சென்னையை அடுத்த ஜல்லடியான்பேட்டையில் கெங்கையம்மன் கோவில் பூட்டை உடைத்து அம்மன் கழுத்தில் இருந்த தங்கத்தாலி திருட்டு ...

14. சென்னை பட்டினப்பாக்கத்தில் உள்ள பிரசித்தி பெற்ற விநாயகர் கோவிலில் பூட்டை உடைத்து பணம் மற்றும் பித்தளை பொருட்கள் திருட்டு...

15. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அருகே காளேகுண்டா பகுதியில் கெட்ட சக்தியை விரட்டுவதாக கூறி 28 சவரன் நகை 12 லட்சம் பணம் பறித்த ஆசாமி தப்பி ஓட்டம்....



16. நாகை மாவட்டம் வாய்மேடு பகுதியில் தனியார் பள்ளி ஊழியர் வீடு ஓட்டை பிரித்து , வீட்டில் புகுந்து 45 பவுன் நகைகள் கொள்ளை...

17. சென்னை ராயப்பேட்டை அருகே மீசப்பேட்டையில் பிரியாணி உடன் வழங்கிய பிரட் அல்வா சுவையாக இல்லை என்று கூறி கடை ஊழியருக்கு அரிவாள் வெட்டு, பிரியாணி கடை சூறை ...

18. சென்னை அமைந்தகரை அருகே பி.பி.கார்டன் பகுதியில் முன்விரோதம் மாநகராட்சி ஊழியருக்கு சரமாரியாக அடிஉதை, பீர் பாட்டிலால் அடித்து மண்டை உடைப்பு....

19. சேலம் மாவட்டம் தாசநாயக்கன்பட்டியில் 50 லட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றுக் கொண்டு திருப்பித் தராமல் கொலை செய்து விடுவதாக மிரட்டிய ஜவுளி கடைக்காரர் மீது புகார் ...

20. நாமக்கல் மாவட்டத்தில் சன்னரக அரிசி விற்பதாக கூறி, தரமற்ற அரிசி விற்பனை செய்ததால் பொதுமக்கள் கொந்தளிப்பு, அரிசியை திருப்பி கொடுத்து பணம் வாங்கினர்...

21. சென்னையில் அதிகமாகும் போலி லாட்டரி விற்பனை , கே.கே.நகர் பகுதியில் லாட்டரி விற்ற கும்பல் சிக்கியது ...

22. புதுக்கோட்டையை சேர்ந்த 15 வயதான சிறுமிகள் 2 பேர், வீட்டில் கோபித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் வேளாங்கண்ணிக்கு சென்ற நிலையில் பாலியல் வன்கொடுமை

23.தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரை பகுதியில் இன்று காலை, கத்தியால் குத்தி மீனவர் படுகொலை

24. செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூர் அருகே சிறுநாகலூரில், கிணற்றில் இருந்து 40 வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலம் மீட்பு.

மாதவரத்தில் மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

சென்னை, அக்.26- சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 வது வார்டு வடபெரும் பாக்கம் பகுதியில் இயங்கி வரும் அரசு ஆதி திராவிடர் நல துவக்கப்பள்ளி கடந்த வாரம் போதிய மாணவர்கள் இல்லாததினால் மூடவுள்ளதாக வும் மாணவர்கள் பக்கத்து பள்ளியில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்றும் ஆசிரியர் வலியுறுத்தியதாக அறிந்து, மாணவர்கள், பெற்றோர்கள், பொது மக்கள், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மற்றும் நிர்வாகிகள் பள்ளிக்கு நேரில் சென்று சுமார் 95 ஆண்டுகாலம் பழமையான பள்ளியை மூடுவதை எதிர்த்து மாவட்ட கல்வி அலுவலரிடம் பேசி மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து இப்பள்ளியில் மாணவர் இன்று மீண்டும் 8 மாணவர்கள் புதியதாக சேர்ந்தனர். மேற்படி பள்ளிக்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரில் சென்று பார்வையிட்டு பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள், இனிப்பு வழங்கி வாழ்த்து தெரிவித்தார். மே லும் பள்ளியில் இன்று பெரு நகர சென்னை மாநகராட்சி சார்பில் மருத்துவர்கள் இலவசமாக மருத்துவ முகாமை நடத்தி குழந்தைகளுக்கு உயரரம், எடை, பரிசோதனை ஆகிய வற்றை மேற்கொண்டு மருந்து மாத்திரைகளை இலவசமாக வழங்கினார்கள்.

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், சி. மூர்த்தி, எஸ். பாலாஜி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், கே. சண்முக பிரியன், எஸ். சிவகுமார், டி. வினோத், எஸ். நாக ராஜ், ராஜ்குமார், டி.திவாகர், எம். மைக்கேல், இ. கார்த்திக், பி.செந்தில், கோவிந்தன், எம்.என்.தளபதி, சின்னத்தோப்பு சதீஷ்குமார் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

முத்துவேல் பாண்டியன்

மந்திரிகளை வைத்து
அழாமல்
மக்களை
திமிரள வைத்து
நிஜமான
ஜனநாயகன் தானே
என்பதை
தெளிவு படுத்தி இருக்கிறார்
ஜெயிலர் 2

நடை உடை
பாவனை
அந்த
கண்ணாடி
குறிப்பாக
"ஐம்பது வருசமா எத்தனையோ
தடவை
என்னைய முடிக்கப் பார்த்தாங்க"
என்னும்
தியேட்டரையே
அதிரவைக்கும் அந்த ஒற்றை வரி
வசனம்
யாவுக்கும்
மேலாக
"முத்துவேல்
பாண்டியன்"
எனும்

கதாபாத்திரத்தின்
கம்பீரப் பெயர்

எல்லாமும்
"முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலினையே"

நொடிக்கு
நொடி
கண்முன்
நிறுத்துகிறது..

ஆம்

உச்சத்தை
தொட்டவனோ



அதை
விட்டவனோ
இல்லை

இன்றும்

என்றும்

நானே உச்சம்
என்பதை

அலட்டாமல்
சொல்லி இருக்கும்
சூப்பர் ஸ்டார்...

கூடவே

விசில் கம்பெனியின்
தலையில் தட்டி

மௌனமாக்கி
இருக்கிறார்

நம்ம
பழைய
கண்டக்டர்...

என்னநாஞ் சொல்றது!



மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

மு.லோகநாதன் தலைமை! நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

வேதாரண்யம் ஒன்றியம், கீழையூர் ஒன்றியம், நாகப்பட்டினம் நகராட்சியை மறுசீரமைப்பு செய்வது என தீர்மானம்!

என். கௌதமன் – பி.எஸ்.சீனிவாசன் – இளமகிழன் பங்கேற்பு!

நாகை, அக். 26- நாகை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ் கே.வேதாரத்தினம், தலைமை செயற் குழு உறுப்பினர்கள் .க.இராஜேந்திரன், ப.கோவிந்தராஜன், இல.மேகநாதன், , மாவட்ட துணை செயலாளர் கற்பகம் நீலமேகம் ஆகியோர் முன்னிலை வைத்தனர். மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர்மணிவண்ணன் வரவேற்றார்.

கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறை வேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்தும், நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் பேசினார். அதைத் தொடர்ந்து தலைமையில் தலைமைக் கழக பிரதிநிதிகளான மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினர் பி.எஸ்.சீனிவாசன் மதுரை தெற்கு மாவட்ட தலைமைச் செயற் குழு உறுப்பினர் இளமகிழன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன், தலைமைக் கழக வழக்கறிஞர் மு. தினேஷ்குமார், மாநில மாற்றுத்திறனாளிகள் அணி துணைச் செயலாளர் அம்பல் குமார், மாநில சிறுபான்மை அணி துணை செயலாளர் மு.சாகுல்ஹமீது,

ஒன்றிய கழக செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், மகா.குமார், ஆர். டி.எஸ்.சரவணன், செல்வ,செங்குட்டுவன், கே.பழனியப்பன், சோ.பா. மலர்வண்ணன், என்.சதாசிவம், சிக்கல் என். ஆனந்த், உதயம் வே.முருகையன், நகர கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். பி..டி.சார்லஸ், கோ.சிவகுமார், உமா செந்தாமரைச்செல்வன், பேரூர் கழக செயலாளர்கள் கா.அட்சலிங்கம், மரியசார்லஸ், சி.சுப்பிரமணி யன். மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, ப.உதயகுமார், அ.பாரிபாலன், ஆர்.ஏ.டி. அண்ணாதுரை. ஆர்.துரைராஜ், கேஸ் வீ.செந்தில், பெ.முருகானந்தம். எஸ்.பால்ராஜ், க.சத்தியமூர்த்தி, த. தமயந்தி, வ. காமல், ஆர், ஆர். குலோத்துங்கள், பாலமுரளி, ஆர்.சுரேந்தர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ். டேனியல்சத்யா, தி.கலையரசன், தாமோதரன், ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கழகத் தலைவர் தளபதியார் ஆணைக்கினங்க, கழக மறுசீரணப்பு தொடர்பாக, வேதாரண்யம் மேற்கு, வேதாரண்யம் கிழக்கு ஆகிய இரண்டு ஒன்றியங்களை வாக்காளர்கள் அதிமாக உள்ளதால் நான்கு ஒன்றியங்களாக அதாவது வேதாரண்யம் மேற்கு,, வேதாரண்யம் கிழக்கு, வேதாரண்யம் தெற்கு ஒன்றியங்கள் என்று மறுசீரமைப்பு செய்வது என்றும், ஒருங்கிணைந்த கீழையூர் ஒன்றியம் அதிக, வாக்காளர்களாக கொண்ட ஒன்றியமாக இருப்பதால் ஒருங்கிணைந்த கீழையூர் ஒன்றியத்தில் உள்ள வாக்காளர்களை கணக்கில் கொண்டு. கீழையூர் கிழக்கு ஒன்றியம், கீழையூர் மேற்கு ஒன்றியம் என சமமாக பிரித்து இரண்டு ஒன்றியங்களாக மறு சீரமைப்பு செய்வது என்றும், நாகப்பட்டினம் நகராட்சி அதிக வாக்காளர்களை கொண்ட நகராட்சியாக.இருப்பதால் ஏற்கனவே நாகப்பட்டினம் நகரம், நாகூர் நகரம் என இரண்டாக உள்ள நிலையில், இந்த இரண்டு நகரங்களை சமமாக பிரித்து நாகை நகரம், நாகூர் நகரம் உருவாகிடுவது என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், தொடக்கப் பள்ளியில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் மழை நீர் தேங்காத வண்ணம் சமப்படுத்துவதற்கும் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை ஜெயமாரிமலர் தேவி, ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், சின்னமாரிமுத்து, புளியங்குளம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஜெயலட்சுமி ராஜகோபால், கிளைச் செயலாளர் கருப்பசாமி, கழக நிர்வாகிகள் சிலம்பரசன், முனியசாமி, தகவல் தொழில் நுட்ப அணி கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.